செ.வெ.எண்: 49 நாள்: 21.11.2016

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு / உவர்நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

- மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்புக்குளம் அமைத்திட ஆகும் செலவினத்தொகை ரூ.7.00 லட்சத்தில் 50 விழுக்காடு 3.50 லட்சத்தில் மானியத் தொகை ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படும்.
- ஏற்கனவே உள்ள மீன்வளர்ப்புக் குளங்கள், தொட்டிகளை சீரமைத்தல், புதுப்பித்தலுக்கு ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.3.50 லட்சத்தில் 50 சதவீத மான்யம் ரூ.1.75 லட்சம் வழங்கப்படும்.
- நன்னீர் வளர்ப்பு இடுபொருள் செலவினத்திற்கு ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.50 லட்சத்தில் 50 சதவீத மான்யம் ரூ.0.75 லட்சம் வழங்கப்படும்.
- உவர்நீர் இறால் வளர்ப்பு இடுப்பொருள் செலவினம் ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.3.00 லட்சத்தில் 50 சதவீத மானியம் ரூ.1.50 லட்சம் வழங்கப்படும்.

மேற்படி மானியம் பின்னிலை (Back ended subsidy) மானியமாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின், முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ளவர்கள் மற்றும் விவசாயிகள் இந்த விளம்பரம் வெளிவந்த 30 நாட்களுக்குள் விண்ணபிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், விவரங்களுக்கு எண்.11, லெட்சுமிபுரம் முதல் தெருவில் செயல்படும் மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடையமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**